DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.164/2024** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW.1** |
| **Name** | : | பேச்சிமுத்து |
| **Father's Name** | : | கிட்டு |
| **Village** | : | காடான்குளம் |
| **Taluk** | : | நான்குநேரி |
| **Age** | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 11.08.2025.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் 1 ம் வாதி ஆவேன். வாதிகள் தரப்பில் 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 14.03.2019 தேதியிட்ட தத்தெடுப்பு ஆவணம் அசல் வா.சா.ஆ.1, 3 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2, 1 ம் வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.3, 2 ம் வாதியின் ஆதார் ஆட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.4, 3 ம் வாதியின் ஆதார் ஆட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.5, 1, 2 வாதியின் திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.6, ஆக குறியீடு செய்யபடுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3 ம் வாதி எப்போது பிறந்தார் 2017 ல் பிறந்தார். 3 வது வாதியை எப்போது தத்தெடுத்தேன் என்றால் 2019 ம் ஆண்டு தத்தெடுத்தேன். 3 வது வாதியை யார் தத்து கொடுத்தார் என்றால் என் தம்பி தத்து கொடுத்தார். மேற்படி தத்தெடுப்பு பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் யார் என்றால் என்னுடைய தம்பி மற்றும் அவரது மனைவி ஆவார். 3 வது வாதி யாருடைய பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் என்னுடைய மற்றும் என் மனைவியின் பராமரிப்பில் இருந்து

வருகிறார். 3 வது வாதி தற்போது என்ன செய்கிறார் என்றால் 6 ம் வகுப்பு படித்து வருகிறார்.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.07.23 19:49:06 +0530